14.08.2026 HMOP.No.142/2022 PW1 Name: ஹரிகிருஷ்ணன்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. திருமணத்திற்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக எதிர்மனுதாரரின் தகப்பனார் மூன்று மாதத்திற்கு திருப்பி தருவதாக கூறி ரூ.2 லட்சம் கடனாக வாங்கினார். ஆனால் திருப்பி தரவில்லை. எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் நான் எதிர்மனுதாரரின் வீட்டிற்கே கொண்டு கொடுத்தேன். பணம் கொடுத்தற்கு ஆதாரமாக எதுவும் எழுதி வாங்கவில்லை. உறவுமுறை காரணமாக எழுதி வாங்கவில்லை.
2. நான் தற்போது கூறும் விவரம் எதிர்மனுதாரரின் தகப்பனார் என்னிடம் டீ கடையில் வைத்து பணம் கேட்டார் என்பதையும் அதற்காக அந்த பணத்தை நான் அவர் வீட்டில் கொடுத்தேன் என்ற விவரத்தை நான் மனுவில் கூறவில்லை. எந்த நண்பர்கள் நான் பணம் வாங்கி கொடுத்தேன் என்றால் பாஸ்கர் த/பெ கோவிந்தசாமி, முனிசாமி த/பெ கோபால் கவுண்டர், பெருமாள் த/பெ பெருமாள், ஆகிய மூன்று பேரிடம் வாங்கி கொடுத்தேன். இந்த இரண்டு லட்சத்தை எப்போது திருப்பி கேட்டேன் என்றால் நான்கு மாதம் கழித்து திருப்பி கேட்டேன்.
3. எங்கு போய் அந்த பணத்தை கேட்டேன் என்றால் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்று கேட்டேன். அப்போது அவர் என்னை அடித்து விட்டார். அடித்ததற்காக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. இந்த பணத்திற்காக நான் நோட்டீஸ் எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லற வாழ்க்கையில் பிரச்சனை வரும்

என்று நான் கேட்கவில்லை. நான் சொல்வது போன்று எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. நான் பணத்தை திருப்பி கேட்டபோது அடித்தார் என்று கூறுவது சரியல்ல. அவர் என்னை அடித்தார். நான் செல்வதுபோன்று உண்மையில் பணம் கொடுத்திருந்தால் அதற்காக நான் பணம் வாங்கிய நபர்களின் பெயர்களை என்னுடைய மனுவில் கூறியிருப்பேன். அவ்வாறு கூறாததால் நான் பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் கொடுமைகள் என்ன செய்தார் என்றால் அவருடைய தகப்பனார் அடியாட்களை வைத்து என்னை அடித்தார். என் தாயாரின் முன்னிலையில் தரக்குறைவாக திட்டினார்.
5. என் தாயாரின் முன்னிலையில் தரக்குறைவாக திட்டினார் என்று தற்போது கூறும் விவரத்தை மனுவில் கூறவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தகப்பனார் என்னை தாக்கவில்லை என்றாலும், என் தாயாரை தரக்குறைவாக திட்டவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் இருந்து எதிர்மனுதாரர் எவ்வளவு பணத்தை எடுத்து சென்றார் என்றால் அவ்வப்போது ரூ.50,000/-, ரூ.20,000/- என்று சுமார் 20 லட்சம் வரை எடுத்திருப்பார். எத்தனை முறை 50 ஆயிரம் மற்றும் எத்தனை முறை 20 ஆயிரம் எடுத்தார் என்றால் பலமுறை எடுத்தார்.
6. சுமார் 100 முறை எடுத்திருப்பாரா என்றால் சாட்சி இருக்கலாம் என்று கூறுகிறார். அவ்வளவு பணம் நான் வீட்டில் வைத்திருப்பதில்லை என்றாலும், எதிர்மனுதாரரை நம்பி நான் அவ்வளவு பணம் கொடுப்பதில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 20 லட்சம் திருடினார் என்று கூறும்போது எதற்காக

புகார் கொடுக்கவில்லை என்றால் மனைவியை திருடி என்று புகார் கொடுக்க மனம் வரவில்லை.

7. நான் சொல்வது போன்று அவர் திருடவில்லை என்றாலும், திருடியிருந்தால் நான் உடனடியாக புகார் கொடுத்திருப்பேன் என்றால் நான் குடும்ப கவுரவத்திற்காக புகார் கொடுக்கவில்லை. திருமண முதல் நாளில் இருந்தே தனிக்குடித்தனம் போகலாம் என்று கூறியிருக்கிறார். இந்த விவரத்தை என் மனுவில் கூறியிருக்கிறேன். எந்த காலத்திலும் எதிர்மனுதாரர் தனிக்குடித்தனம் போகவேண்டுமென்று கேட்கவில்லை என்றால் என்னேறமும் தனிக்குடித்தனம் போகவேண்டும் என்று சித்தரவதை செய்தார்.

8. நான் சொல்வதுபோன்று தனிக்குடித்தனம் போக வேண்டும் என்று கேட்டு இருந்தால் அவர் 3 1/2 ஆண்டு காலம் அவரோடு வாழ்ந்திருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. போராடி வாழ்ந்தேன். நான் சொல்வது போன்று நடந்திருந்தால் எனக்கு குழந்தை பாக்கியம் இருந்திருக்காது என்றால் சித்தரவதை செய்ததற்கும் குழந்தை பாக்கியத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை. எந்த தேதியில் மனுதாரர் வீட்டிற்கும் போகும்போது என்னை அடித்தார் என்றால் குழந்தை மூன்று மாதம் இருக்கும்போது பார்க்க சென்றபோது அடித்தார்கள்.

9. நான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு போகவில்லை என்றாலும் அவர்கள் என்னை அடிக்கவில்லை என்றாலும், அப்படி அடிந்திருந்தால் எந்த தேதியில் அடித்தார்கள் என்ற விவரத்தை நான் மனுவில் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. அடியாட்கள் பெயர் எனக்கு

தெரியாது. எதிர்மனுதாரரின் தங்கைக்கு வலிப்பு நோய் இருப்பதாகவும் அவருடைய தகப்பனார் செலவு செய்ய மாட்டார் என்றும் என்னிடம் எப்பொழுது கூறினார் என்றால் நிச்சயதார்த்தம் நடந்து நான்கு நாட்கள் கழித்து கேட்டார். நிச்சயதார்த்தம் ஆன உடன் நான் எதிர்மனுதாரருடன் பேசிக்கொண்டுதான் இருந்தேன்.

10. எதிர்மனுதாரரின் தகப்பனார் காவல் நிலையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றதால் எதிர்மனுதாரரின் தாய் மற்றும் தங்கையை பராமரிக்க கூடிய வசதி உள்ளது என்றால் சரியல்ல. அவர்களை அவர் பராமரிக்கவில்லை. பலாயிரம் ரூபாய் எதற்காக செலவு செய்தேன் என்றால் ஸ்டான்லி மருத்துவமனையில் ஓய்வு பெற்ற மருத்துவர் திரு.முருகேசன் ஆம்பூருக்கு சனிக்கிழமையில் வருவார். அதற்காக செலவு செய்தேன். எதிர்மனுதாரரின் சகோதரிக்காக சுமார் ரூ.32 ஆயிரம் ரூபாய் செலவு செய்தேன்.

11. நான் மருத்துவ செலவு செய்தற்கான ஆதாரம் என்னிடம் உள்ளதா என்றால் நான் அவரிடமே கொடுத்துவிட்டேன். நான் எந்த மருத்துவ செலவும் செய்யவில்லை என்றாலும், அதற்கான அவசியம் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று உண்மையில் செலவு செய்திருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்ததில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

12. நோயாளி மருத்துவமனைக்கு செல்லும்போது தேவைப்படும் என்பதால் அந்த ஆவணங்களை அவரிடம் கொடுத்துவிட்டேன். மருத்துவ ஆலோசனைக்கு பரிந்துரை ரசீது தான் தேவைப்படும் என்றாலும்,

செலவு செய்த ரசீது தேவைப்படாது என்பதால், நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று எதிர்மனுதாரர் தாம்பத்திய வாழ்விற்கு மறுத்திருந்தால் இரண்டு குழந்தைகள் பிறப்பதற்கு வாய்பே இல்லை என்றால் சரியல்ல. குழந்தை பெற்றுக்கொள்வது மட்டும் தாம்பத்தியம் அல்ல. 2ம் குழந்தையை என்னிடம் சொல்லாமல் கருகலைப்பு செய்ததற்காக நான் புகார் செய்தேன் என்றால் குடும்ப கவுரவத்திற்காக எந்த புகாரும் கொடுக்கவில்லை.

13. நான் அடித்ததால் தான் அவருக்கு கருகலைப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் அடிக்கவில்லை. தவறான நடத்தையில் குழந்தை உருவானதால் அவரே அதை கலைத்துவிட்டார். தற்போது கூறும் இந்த விவரத்தை என் மனுவில் கூறினேனா என்றால் முதல் குழந்தைக்கு பாதிப்பு ஏற்படும் என்று கூறவில்லை. நான் சொல்வதுபோன்று எதிர்மனுதாரர் நடத்தையில் தவறு கிடையாது என்றாலும் வழக்கிற்காக நான் தவறாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. அதை நேரில் பார்த்ததால் தான் பிரியவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

14. நான் பார்க்கும்போது யாருடைய தொடர்பில் எதிர்மனுதாரர் இருந்தார் என்றால் அவருடைய தந்தையாருடைய தொடர்பில் இருந்தார். இந்த விவரத்தை என் மனுவில் கூறினேனா என்றால் நான் எதையும் பதிவு செய்ய விரும்பவில்லை. நான் சொல்வது உண்மையாக இருந்திருந்தால் மனு தாக்கல் செய்யும்போதே அயற்சேர்க்கை (Adult) என்ற மனு தாக்கல் செய்திருப்பேன் என்றால் அவ்வாறு செய்யாததால்

நான் கூறுவது சரியல்ல. எதிர்மனுதாரர் பலமுறை பிரச்சனை செய்தார் என்று கூறுவது தொடர்பாக நான் புகார் கொடுத்தேனா என்றால் குடும்ப கவுரவத்திற்காக நான் புகார் கொடுக்கவில்லை.

15.நாட்றம்பள்ளி காவல் நிலையில் கொடுக்கப்பட்ட சிஎஸ்ஆர் புகாரின் நகலை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் அடித்ததால் தான் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும், அதற்காக எனக்கும், எதிர்மனுதாரருக்கும் அறிவுரை கூறினார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கும், அவருடைய தகப்பனாருக்கும் அறிவுரை கூறினார்கள். 20.01.2011ல் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் என்னிடம் நகல் கிடையாது. எதிர்மனுதாரர் அழைத்து வந்த அடியாட்களின் பெயர் தெரியாது.

16.நான் சொல்வது போன்று எதிர்மனுதாரர் அடியாட்களை அழைத்து வந்திருந்தால் அவர்களின் 1,2 பெயர்களின் பெயரையாவது கூறியிருப்பேன் என்றாலும் அவ்வாறு கூறாதது சரியல்ல. எதிர்மனுதாரர் பெயரில் நான் தான் பொய் புகார் கொடுத்தேன் என்றாலும், நானே என் மனுவில் 7வது பத்தியில் கூறியிருக்கிறேன் என்றால் தட்டச்சு பிழையாக கூட இருக்கலாம். எந்த ஊரில் பஞ்சாயத்து பேசினேன் என்றால் என் ஊரில் பஞ்சாயத்து பேசினேன். 25.12.2013 அன்று பேசினோம். அதற்குமுன்பு வரை சேர்ந்து வாழ பஞ்சாயத்து பேசினோம். அதற்கு பிறகு வரும் பஞ்சாயத்து முடித்துகொள்ள பேசினோம். பொருட்களை குடும்ப பெரியோர்கள் முன்னிலையில் எடுத்து கொடுக்கப்பட்டது.

17.சாட்சி தற்பொழுது அடியாட்களை கூப்பிட்டு வந்து அவர்களே பொருட்களை எடுத்து சென்று விட்டார்கள். காவல் நிலையத்தில் இதுகுறித்து நான் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரர் அவருடைய பொருட்களை எடுத்துச்செல்லவில்லை என்றாலும் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சீதனப்பொருட்களை திருப்பி கொடுக்கக்கூடாது என்பதற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவருடைய பொருட்கள் எதுவும் என்னிடம் இல்லை.

18.சீதனப்பொருட்களை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வண்டி வாங்குவதற்காக நான் வாங்கிய 2 லட்சம் ரூபாய் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் வரதட்சணை வாங்கவில்லை. எதிர்மனுதாரர் பள்ளியில் வேலை செய்து ரூ.40 ஆயிரம் சம்பாதிக்கிறார் நிரூபணம் செய்ய ஆதாரம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்தாரா என்றால் செய்தார் அதில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

19.அதன்படி நான் மாதந்தோறும் செலுத்தி வருகிறேன். அந்த மனுவில் நான் பள்ளி தாளாளரை விசாரித்தபோது அவர் தன்னுடைய பள்ளியில் வேலை செய்யவில்லை என்று கூறினார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவர் விசாரணை செய்தற்காக ஞாபகம் உள்ளது என்றாலும் விசாரணைக்காக ஞாபகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இதுநாள்வரை எதிர்மனுதாரர் அன்பான மனைவியாக இருந்திருந்தாலும், இனியும் அவர் சேர்ந்து வாழதான் விரும்புகிறார்

என்றாலும், நான் தான் வெறுத்து ஒதுக்கி வருகிறேன் என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் அன்பாக இல்லை. சேர்ந்து வாழ்வதாக எந்த மனுவிலும் கூறவில்லை.

20. அவருடன் நான் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேன் என்றால் நான் தயாராக இல்லை. குழந்தைகளின் நலன் கருதி எதிர்மனுதாரர் சேர்ந்துவாழ விரும்புகிறார் என்றால் என்னை பிரிந்த பிறகு வேறு ஒரு நபருடன் சேர்ந்து வாழ்கிறார். ஆகவே, எனக்கு விடுதலை கொடுக்கவேண்டும். அவர் வேறு ஒருவருடன் சேர்ந்து வாழ்கிறார் என்று மனுவில் கூறவில்லை. இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 13/08/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

Sd/xxx
சார்பு நீதிபதி
வாணியம்பாடி.